முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1230

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.02.2023, வெள்ளிக்கிழமை

1. பசிபிணி விரட்டி உலகை காக்க
   பரமானந்த சதாசிவ சற்குருவாய் வந்த
   வாசி வென்ற ஞானியே அரங்கனே
   வள்ளலே வாழுகின்ற தவசியே
2. தவசியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தக்கதொரு ஞான அறிவுரை ஆசி
   அவனியில் சுபகிருது கலை திங்களில்
   (சுபகிருது வருடம் தை மாதம் 27 ம் நாள் 10.02.2023, வெள்ளிக்கிழமை)
   அரங்கனுக்கு ஆற்றல்கூட எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
   உலகோர்க்கு ஊழை அகற்றும் மாதவசி
   குறைவின்றி அரங்கன் திருப்பாதம் பற்றி
   குருவேஎன சரணாகதி கொண்டமக்களுக்கு
4. மக்களுக்கு ஞானம் சித்திக்கும்
   மக்களுக்கு மரணமே தள்ளிநிற்கும்
   தேக்கமின்றி அரங்கன் திருவடிபற்றி தெய்வநெறி இதுவேஎன்று
   தெரிவிப்பேன் தேசிகன் குடில்நோக்கி சரணாகதிகொண்டு
5. கொண்டுமே அரங்கன் உபதேசம் சொல்செயல்களை
   குறைவின்றி ஞானமாக ஏற்று
   ஏற்று உலகோர் பின்தொடர்ந்தால்
   இந்த உலகம் சடுதி மாற்றங்காணும்
6. ஆற்றல்பட அரங்கனுள் யானிருக்கேன்
   இந்த அடையாளம் கண்டு உலகோர்தேற
   மாற்றம் வேண்டி அரங்கன் குடில்நோக்கி
   மக்களெல்லாம் மனமுவந்து சரணாகதி கொண்டு
7. கொண்டுமே அரங்கன் திருப்பாதம் பற்றி
   குறைவிலா தொடர்ந்து வருகவருக
   உண்டான பிறவிநோக்கம் தெளிவு கண்டு
   ஊழை வென்று உலகோரெல்லாம் ஞானிகளாக
8. ஆகவே அரங்கனால் ஆவது உறுதி
   அற்புதத்தை ஆறுமுகன் சூட்சுமமாய்
   இருந்து உலகினில் நடத்தி
   உலகையே ஞானலோகமாக மாற்றி மகிழ்விப்பேன்

ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–